தமிழச்சி தங்கபாண்டியன்
தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

நாள் : 12.02.2023

# PRESS RELEASE

## ஹாங்க் நூல் கடமையைக் குறைக்க கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

## திமுக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி

ஹாங்க் நூல் கடமையை நாற்பது சதவீதத்திலிருந்து பத்து சதவீதமாகக் குறைக்குமாறு ஒன்றிய அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

**இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

ஜவுளித் துறைக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நிதித் திட்டம் (டியுஎப்எஸ்) மற்றும் ஜவுளித்துறை தொடர்பான இதர திட்டங்கள் ஆகியவற்றுக்கான மானியத் தொகையை விடுவிக்க ஹாங்க் நூல் கடமையை 40 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்க ஒன்றிய அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

அவ்வாறு கோரிக்கை ஏதும் வந்திருந்தால் அதைப் பற்றிய விவரங்களையும் அது தொடர்பாக ஒன்றிய அரசு

மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

ஜவுளித்துறை மூலம் நமது நாட்டில் 2025 ஆம் ஆண்டுக்குள் 2.5 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும் என்ற தகவல் உண்மையா? அவ்வாறு உண்மையானால் ஒன்றிய அரசு அது தொடர்பாக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்

தமிழகத்தில் உள்ள ஜவுளி ஆலைகளுக்கு கடந்த ஏழு ஆண்டுகளில் ஒன்றிய அரசு அளித்த நிதி உதவி விவரங்களைத் தெரிவிக்க வேண்டும் என்றும் உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் ஜவுளித்துறை இணை அமைச்சர் தர்ஷனா ஜர்தோஸ் அளித்த பதில் விவரம் வருமாறு:**

பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த ஜவுளி ஆலை உரிமையாளர்கள் சங்கம், நூற்பாலை உரிமையாளர்கள் சங்கம், கைத்தறி மற்றும் ஜவுளித்துறை இயக்குனர் ஆகியோரிடம் இருந்து ஒன்றிய அரசுக்கு இது தொடர்பாக கோரிக்கைகள் வந்து கொண்டுள்ளன. ஹாங்க் நூல் கடமையைக் குறைக்க வேண்டும் என்று அந்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் தேதி வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி ஹாங்க் நூல் கடமை நாற்பது சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக மாற்றி அமைக்கப்பட்டது.

ஜவுளி துறையில் நேரடி வேலைவாய்ப்பு 4.5 கோடி அளவுக்கு இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஜவுளித்துறையில் முதலீடுகளை அதிகரிப்பது, வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது, நவீனமய நடவடிக்கைகளை மேற்கொள்வது, நெசவு மற்றும் பதப்படுத்தல் ஆகியவற்றை நவீனமயமாக்குவது, ஒருங்கிணைந்த பதப்படுத்தும் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது, தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது, தேசிய கைவினைப் பொருள்கள் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவது ஜவுளி பூங்காக்களை அமைப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஒன்றிய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஜவுளித்துறையில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒன்றிய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக உற்பத்தித் திறனுடன் இணைந்த ஊக்கத் தொகை (பிஎம்ஐ) திட்டம் ஜவுளித் துறையில் நடைமுறைப்படுத்தப்படும். பிரதம மந்திரி ஒருங்கிணைந்த ஜவுளி பிராந்தியம் மற்றும் ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் ஏழு பெரிய ஜவுளி பூங்காக்களை (பிஎம்-மித்ரா)அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்கள் நிறுவனங்களுக்கு ஒன்றிய நிதி அமைச்சகம் நிதி உதவி அளித்து வருகிறது இது தொடர்பாக மாநில அரசுகளிடம் இருந்து வரும் உத்தேசத் திட்டங்களின் அடிப்படையில் இந்த நிதி உதவி அளிக்கப்படுகிறது

******